ஸ்ரீ தந்வந்தரயெ நம:

# வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை.


Vol. 14. | JUNE 1952. | No. 6





श्रीसुधादिसोदरौषधीशसंभवोज्वला
धीविलासहेतुगोप्रसारशोधितान्तरा॥
कामदा कलावती कवीन्द्रवर्णिता परं
पत्रिकेश्वराश्रया विभातु वैद्यचंद्रिका॥


ஆசிரியர்: பண்டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.
உதவி ஆசிரியர்: பண்டிட் P. S. ராமசர்மா, கரூர்.



வருஷ சந்தா 5—0—0

கோட்டக்கல்

## ஆர்ய வைத்தியசாலையின்

**மருந்துகள் எல்லா வித வியாதிகளையும் பூர்ண குணப்படுத்துவதுடன், வைத்தியர்களின் கீர்த்தியையும் பாதுகாக்கிறது.**

எல்லா வித நோய்களுக்கும் பூர்ண பரிஹாரம் தேடுகிறவர்கள்

எங்கள் தலைமை வைத்யர்

**P. M. வாரியரை**

நேராகவோ, தபால் மூலமாகவோ

யோஜனை கேட்டு பலன் அடையலாம்

**நரஸிம்ம ரஸாயனம், க்ஷீரபலா**

முதலிய மருந்துகளின் சிறப்பு நிகரற்றது.

எங்கள்

## "பாடாதி சூரணம்"

பல்லின் இகறில் சீ வருவது, ரக்தம் வருவது, அரிப்பு, பல் ஆட்டம், பல் தேய்ந்து போவது, முதலிய பல் இகற் சம்பந்தமான நோய்களை முற்றிலும் தீர்த்து, பல்லிற்கும், இகறுக்கும் வலுவூட்டக் கூடியது. ஆகாரத்திற்கு முன் இச்சூர்ணத்தை தேனில் கட்டியாகக் குழைத்து இகறிலும், பல்லிலும் தடவி அழுத்தி தேய்த்து சிறிது நேரம் கழித்து வென்னீரினல் கொப்பளிக்கவும்.

கள்ளிக்கோட்டை, பாலக்காடு, திரூர், ஈரோடு பிராஞ்சுகளில் நல்ல பயிற்சியும், திறமையும் வாய்ந்த எங்கள் உதவி வைத்யர்கள் எப்பொழுதும் இருப்பார்கள்.

*Manager,*

**Arya Vaidyasala, Kottakal P. O.,**
**S. MALABAR.**

## பொருளடக்கம்.

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தாளத்திற்கு ஒத்த நடனம் | 1 |
| 2. | விதாஹம் (S. V. ராதகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி) | 3 |
| 3. | கேதகீ ப்ருங்காமலக தைலம் (Dr. S. வெங்கட்டராஜன், L. I. M.) | 7 |
| 4. | பவுத்திர ரோகம் (Dr. S. வெங்கிட்டராஜன், L. I. M.) | 8 |
| 5. | நேத்ர ரோக சிகித்ஸை (ஜி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தஞ்சாவூர்) | 12 |
| 6. | வைத்தியச் செய்திகள் | 14 |
| 7. | திரட்டு வாகடம் ௫0 —தொடர்ச்சி. | 5-8 |

உ

# தாளத்திற்கு ஒத்த நடனம்.

தெனாலியில் சென்ற மே-மீ 20-உ நடந்த ஆந்திர மாகாண டாக்டர்கள் மகாநாட்டில் சென்னை சுகாதார மந்திரி ஸ்ரீ ஏ. பி. ஷெட்டியும் மகாநாட்டிற்கு தலைமை வஹித்த டாக்டர் ஜி. வி. ஹனுமந்தராவும் பேசிய விபரம் இம்மாதச் சந்திரிகையில் சேர்க்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீ சுகாதார மந்திரி அவர்கள் "சுதேச வைத்ய முறைகளை நீடிப்பதானால்" என்று ஆரம்பிப்பதிலிருந்து தனக்கு இஷ்டமில்லாத ஒரு முறையாக அதைக் கருதுகிறதாகத் தெரிகிறது. "ஜனங்களின் விருப்பத்திற்கு மதிப்புக்கொடுத்து உள் நாட்டுமுறைகளை நீடிப்பதாயின்" என்று பின்னாலும் ஒருதாளம் தட்டு கிறார். சர்க்கார் நியமித்த நிபுணக்கமிட்டிகள் பல சாதகமான சிபார்சு கள் செய்தும் நமது மந்திரி உள்நாட்டு முறைக்கு தாளம் போட்டுப் பழகும் பயிற்சியிலேயே இருக்கிறார். இவர் உபன்யாஸத்தைப் பூராகவும் வாசித்தால் இவர் உள்ளம் தெளிவாக விளங்கும். ஆனால் ஜனங்களின் ராஜ்யம், மறுபடியும் ஜனங்களிடம் ஓட்டுக் கேழ்க்கும் சந்தர்ப்பம் வரும்என்பதை மறவாமல் இருப்பதற்க்காக வாவது நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். தலைமை வஹித்த ஸ்ரீ ஹனுமந்தராவ் முன்பின் முரணான பல

தூஷணைகளுடன் பேசுவது பொதுஜனங்களுக்குச் சிறிது யோசனையை உண்டுபண்ணலாம். தேசீய வைத்யர்களுக்கு இதில் சிறிதும் வியப்புத்தட்ட ந்யாயம் கிடையாது. இவரும் இவரைப் போன்ற மனோபாவமுள்ள ஆங்கில வைத்யர்களும் இம்மாதிரி எவ்வளவோ பேசியிருக்கிறார்கள். பிற்காலத்திலும் பேசப்போகிறார்கள். நாட்டு வைத்ய முறைகளின் பரிச்சயம் இல்லாத குறை மட்டும் இதற்குக் காரணமல்ல. மேல் நாட்டுப் படிப்பால் வேதங்கள் துடங்கிய இந்தியக் கல்விகளில் இயற்கையாகவே இவர்களுக்கு நம்பிக்கை குறைந்து வருகிறது. ஆகையால்தான் தேசீயம் என்றாலே இளப்பமாகத் தோன்றுகிறது. சில மாறுதல்கள் செய்ய விரும்பினால் மூல தத்வங்களின் பெருமையை அறியாமலும் தேசீய வைத்யத்திலிருந்து சில மருந்துகளைமட்டும் எடுத்து நவீன வைத்யத்தில் கலந்துவிட்டால் லக்ஷ்யம் பூர்த்தியாகிவிடும் என்றும் எண்ணுவதினாலும்வரும் பாதகங்களை சிறிது சிந்திக்கவேண்டும். இந்திய வைத்ய முறைகளைப் போதிக்கும்பொழுது ஆங்கில முறைகளைச் சேர்த்துப் போதிப்பதால் குழப்பம் ஏற்படும் என்று சொல்லுகிறார். ஆங்கில வைத்ய முறை கலக்காத தனி இந்திய வைத்ய முறை உபயோகமில்லை என்று மந்திரியின் தாளத்திற்கு ஒத்து நடிக்கவும் செய்கிறார்.


திருச்சி

**ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.**

17 சின்னக்கடைத் தெருவு,

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

**வைத்தியர்களுக்கு**

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

# விதாஹம்.

[வைத்ய விசாரதா, S. V, ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி]

விதாஹம் என்பது சரீரத்தில் சேர்ந்த ஆகாரம் முதலியவைகள் பித்தத்தால் பாகம் அடைந்துவரும் தருவாயில் பாதி பாகமடைந்தும் பாதி பாகமடையாமலும் இருக்கும் நிலைமையை குறிக்கின்றது. இந் நிலையை அடைந்த ஆகாராதிகளுக்கு விதக்தம் எனப் பெயர். **विदग्धं पक्वापक्वं** என சக்ரபாணி சொல்லுகிறார். இந்நிலை பித்தத்தை அதிகப்படுத்துகின்றது. தோஷங்களின் ஸம நிலையை பாதித்து ஒரு தோஷத்தின் அளவையும் தன்மையையும் அதிகப்படுத்தும் சுபாவம் இவ விதாஹத்திற்கு உண்டு.

சாப்பிட்ட ஆகாரம் ஜீர்ணமாகி வரும்பொழுது இவ் விதாஹம் தினமும் ஏற்படுகின்றது; பித்தத்தையும் அதிகப்படுத்துகின்றது. இந்நிலை ஆமாசயத்தில் ஆகாரத்தைப் புளிப்பு விபாகமாக மாற்றும் சமயத்தில் ஏற்படுகின்றது.

परं तु पच्यमानस्य विदग्धस्याम्ल भावत :।
आशयात् च्यवमानस्य पित्तमच्छमुदीर्यते ॥

சரக சிகித்ஸை **15** அ.

"வாயில் உமிழ்நீர் சேர்க்கையால் ஏற்படும் தித்திப்பு விபாகத்திற்குபின் ஆமாசயத்தை அடைந்த ஆகாரம் தான் பாகமடையும் பொழுது (விதக்தமாயிருக்கும்பொழுது) புளிப்பு விபாகத்தை அடைந்து அவ்வாசயத்தைவிட்டு நெகிழ்ந்து கிரஹணியை அடையுங்கால் தெளிந்த பித்தத்தை அதிகமாக உண்டாக்குகின்றது."

இந்நிலையில் ஏற்படும் விதாஹம் காலாபேக்ஷ விதாஹம் எனக் கூறப்படும். இது தேஹத்திலுள்ள தோஷங்களின் ஸம நிலையை ஓரளவு மாற்றினாலும் ஆகார பாக காலத்தில் மட்டும் ஏற்பட்டு உடன் மறைவதாலும், கெடுதி விளைவிக்காதிருப்பதாலும் இதை தோஷமாகக் கருதுவதில்லை. இந்நிலையை பிராகிருத விதாஹம் எனக் கூறலாம்.

இந் நிலையை உண்டாக்கும் சக்தி ஆகாரத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஹிதமான புளிப்பு, உப்பு, உரைப்பு, சுவையுள்ளதும் தீக்ஷ்ண உஷ்ண குணங்களுள்ளதுமான திரவியங்களால் ஏற்படுகின்றது. இத் திரவியங்களுக்கு பிராகிருத விதாஹ கரங்கள் எனப் பெயரிடலாம். முன் கூறிய குணங்கள் குறைந்தோ சுத்தமாக இல்லாமலோ உள்ள திரவ்யங்களைச் சாப்பிட விதாஹமே ஏற்படாதிருப்பதுடன் பித்தமும் சரீரத்தில் குறைவடைகின்றது. இவைகளை அதிகமாக உபயோகப்படுத்த விதாஹ சக்தி அதிகமாக புளிப்பு விபாகமாவதால் ஆகாரம் சீக்ரம் ஜீர்ணமாகி ஜடராக்னியின் நிலையில் மாறுதல் ஏற்பட்டு தீக்ஷ்ணக்னியாகக் காரணமாகின்றது. ஆக ஆகாரம் புளிப்படையும் நிலையையே விதாஹம் என்ற சப்தத்திற்குப் பொருளாகக்கோள்வது வழக்கம்.

இயற்கை நிலையில் ஏற்படும் விதாஹத்தால் (புளிப்பு விபாகத்தால் புளித்த ஏப்பம் முதலிய விகாரங்களோ, தீக்ஷ்ணக்னியோ ஏற்படாததாலால் இந் நிலையை விதாஹம் எனக் குறிப்பிடுவது வழக்கமில்லை புளித்த ஏப்பம், தாஹம், மார்பில் எரிச்சல், நாக்கில் கசப்பு போன்ற பித்தமதிகமாகியதைக் காட்டும் லக்ஷணங்கள் காணப்படும் பொழுதே அதை விதாஹம் எனவோ; விதக்தா ஜீர்ணம் எனவோ கூறுவது சாஸ்திரகாரர்களின் துணிபு.

" यद्यपि सर्वमन्नमवस्थायां (अवस्था पाके) विदह्यते, तथाऽपि येऽत्यर्थं विदाहिनस्त एव विदाहिन इत्युच्यन्ते; विशेषदाह कर्तृत्वात् "

என்று இவ்வழியை ஆதரிக்கிறார் சக்கிரபாணி. அதனால் வைகிருத விதாஹத்தை—இயற்கையைவிட்டு மாறி தேகத்திற்குக் கெடுதி விளைக்கும் நிலையையே விதாஹம் எனக் குறிப்பிடுகிறார்கள்.

வைகிருத விதாஹத்தால் ஏற்படும் நோய் இருவகைப்படும். விதக்தா ஜீர்ணம் எனவும் தீக்ஷ்ணக்னியெனவும் விதக்தா ஜீர்ணம் என்பது:- இயற்கையாக புளிப்பு விபாக நிலையை அதிகப்படுத்தும் குணமுள்ள சில திரவ்யங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு விதாஹிகள் எனப் பெயர். இத் திரவ்யங்களாலான ஆகாரங்களை உட்கொண்டதும் ஆமாசயத்தால் ஸ்வபாவமாக ஆகாரத்தைப் புளிப்பாக மாற்றும் சக்தியுடைய பித்தம் மேலும் அதிகமாகி தனது ஸ்வரூபத்தை புளித்த ஏப்பம், எரிச்சல், நாவில் கசப்பு

போன்றவைகளால் வெளிக்காட்டுகின்றது. அதிக அளவில் புளித்த ஆகாரம் கிரஹணியில் நழுவி குடல்களில் ஸஞ்சரிக்கையில் விதக்தமான ஆகாரத்தின் சாரம் கிரஹிக்கப்பட்டு சரீரம் முழுவதும் ஸஞ்சரித்து பித்த நோய்களுக்குக் காரணமாகின்றது. புளிப்பு விபாகத்தை மாற்றக்கூடிய கடுவி பாசம் தனது சக்திக்கு மீறிய புளிப்பை மாற்றமுடியாமல் ஆகாரத்தைப் புளிப்பாகவே இருக்க விடுகின்றது. இந்நிலை வெளியிலிருந்துவந்த காரணத்தால் விதாஹியான ஆகார ஸேவனத்தால்—ஏற்படுவதால் விப்பிர கிருஷ்ட விதாஹம் எனக் கூறப்படுகின்றது.

விதாஹத்தின் மற்றொரு நிலையான தீக்ஷ்ணாக்னி என்பது விதாஹியான ஆகாரங்களை ஸேவிக்காதிருக்கும் நிலைமையிலும் ஆமாசயம் கிரஹணீ இவைகளில் ஏற்படும் பாசக பித்தம் அதிகமாகி எவ்விதமான ஆகாரம் எவ்வளவில் சாப்பிட்டபோதிலும்சீக்ரமாக ஜீர்ணம் செய்யும் சக்தியைப் பெறுகின்றது. இது ஸந்நிகிருஷ்ட விதாஹமாகும்.

இவ்விரு நிலைகளும் கெடுதி விளைவிக்கக் கூடியவைவையே. இவ்விரு நிலைகளையே விதாக சப்தத்தால் வியவஹரிக்கிறார்கள்.

பிராகிருத விதாஹ காலத்தில் பிராகிருத (இயற்கை) பித்தத்தின் விருத்தியும், வைகிருத விதாஹமான விதக்தா ஜீர்ண நிலையிலும், தீக்ஷ்ணாக்னி நிலையிலும் பித்தத்தின் தோஷ நிலையை அதிகப்படுவதும் ஏற்படுகின்றன.

जीर्णेऽन्ने वर्धते वायुर्विदग्धे पित्तमेव तु ।
भुक्तमात्रे कफश्चापि

ஸுச்ருத—ஸூத்ர **46** அ.

जीर्णन्ते वातजा रोगा जीर्यमाणे तु पित्तजा:।
श्लेष्मजा भुक्तमात्रे तु लभन्ते प्रायशोबलम् ॥

சரக சிகித்ஸை—**30** அ.

அதனால்தான் பித்த நோய்கள் பச்யமானாவஸ்தை என்கிற ஜீர்ணமாகும் தருவாயில் தனது முழு பலத்தையும் காட்டுகின்றன.

இந்நிலைகளை நவீன வைத்ய விக்ஞான முறையில் சற்று பரிசீலனை செய்வோம்.

ஆகாரம் அருந்தியவுடன் உமிழ்நீரிலுள்ள ஆகார ஜீரணச்சத்து ஆகாரத்தை க்ஷார **(alkaline)** நிலையை அடையச் செய்கின்றது. அதன்பின் ஆமாசயத்தை அடைந்ததும் அங்குள்ள ஹைட்ரோக் ளோரிக் ஆஸிட் என்ற லவணமிலத்தால் ஆகாரத்தின் க்ஷார நிலை மாறியதும் பெப்ஸின் **(Pepsin)** ரேனின் **(Rennin)** என்ற இரண்டு திரவ்யங்களால் ஆகாரம் **20—30** நிமிஷங்களில் புளிப்பு நிலையை அடைய செய்யப்படுகின்றது. இவ்விதம் புளிப்படைந்த ஆகாரம் டியோடினம் என்ற பாகத்தை அடைந்தவுடன் புளிப்பின் சக்தியால் நெகிழ்ந்த ஆக்னியாசய (**Pancreas**) த்தின் திரவத்தால் மறுபடியும் பாகமடைகின்றது. இதுதான் நவீனர்களின் அம்ல விபாக முறை இதுவே. பிராகிருத (இயற்கை) விதாஹ நிலை.

விதாஹியான ஆகாரங்களை அருந்துவதால் ஏற்படும் விதக்தா ஜீர்ணத்தைப்பற்றிக் குறிப்பிட்டோமல்லவா விதாஹியான ஆகாரங்கள் என்பது புளிப்பு, உப்பு, சுவை அதிகமுள்ளதும் முறிந்து புளித்துப் போகக் கூடியதுமான ஆகாரவகைகள், கறந்து நாழியான பால் போன்றவை. இவைகளைச் சாப்பிட **Lactic acid, Butyric acid Aceticacid** போன்ற **Organic acid**கள் உத்பத்தியாகி அந்நிலையில் ஏற்படும் புளித்துப்போகுதல், முறிவு, நாற்றம் இவைகளால் புளித்த அல்லது கசந்த ஏப்பம், தலைசுற்றல், எரிச்சல், மூர்ச்சை, புகைச்சல் போன்ற பித்த விகாரங்கள் ஏற்படுகின்றன. தீக்ஷ்ணாக்னி என்பதை நவீனர்களின் **Hyper chlorhydria** (ஹைபர் க்ளோர் ஹைட்ரியா) என்ற நோயுடன் ஒப்பிடலாம். அதாவது உமிழ்நீரினால் ஏற்படும் பாகத்தை மாற்றும் குணமுள்ள **Hydrochloric acid** ஹைட்ரோக் ளோரிக் ஆஸிட் என்ற லவணமிலம் அதிகமாகக் கசிந்து ஆகாரத்தை சீக்ரமாகப் புளிப்பாக மாற்றுவதுடன் ஆகாரம் ஆமாசயத்தைவிட்டு வெளிவந்த பிறகும் கசிவதால் வெறுங்குடலில் அமிலத்தால் ஏற்படும் புண்ணும் வேதனையும் ஏற்படுகின்றது. அதனால் ஆமாசயத்தில் ஆகாரமிருக்கும்வரை வேதனை குறைந்தும் ஆகாரம் வெளிப்பட்டதும் வேதனை அதிகமாவதும் கண்கூடு.

தீக்ஷ்ணாக்னிக்குக் காரணமாக ஆமாசயத்தில் கபக் குறைவையும் பித்தம் அதிகமாவதையும் குறிப்பிடுகிறார் சரகர். அதனால் தான் தீக்ஷ்ணாக்னி சிகித்ஸையில் கபத்தை அதிகப்படுத்தும் முறையை ஆதரிக்கிறார். நவ்ய வைத்யத்தில் கபத்தின் (**Mucin**) சூர்ணத்தை குடற்புண் வருவதைத் தடுக்கத் தற்சமயம் கொடுக்கிறார்கள் என்பது கவனிக்கத் தகுந்தது.

இதைப்பற்றிய மற்ற விவரங்களைப் பிறகு கவனிப்போம்.

# கேதகீ ப்ருங்காமலக தைலம்.

(Dr. S. வெங்கட்டராஜன், L. I. M.)

"योगसंग्रहं" என்ற 11026 நெ. சுவடியிலிருந்து எடுக்கப்பட்டது.

**1.** केतकी भृङ्गामलक तैलम् ।।

केतक्यामलकानां च भृङ्गराजामृतं तथा ।
पृथक्तुलार्धं संचूर्ण्य जलद्रोणचतुष्टयम ।।
चतुर्भागावशेष तु तिलतैलाढकद्वयं ।
चन्दनं मधुकं यष्टि फलिनी वच पुष्करं ।।
चातुर्जातमुशीरं च रास्ना शुण्ठी बला चरी ।
जाती चोरकह्रीबेर घन दूर्वाङ्कुराणि च ।।
धान्यक सरळं पद्म कुङ्कुमोत्पल सारिभा ।
वटप्ररोह भूधात्री पंचवृक्षप्रवालकम ।।
एतेषां पलमादाय शनैर्मृद्वग्निना पचेत ।
केशप्रवर्धनं प्राप्यं कपालामयजान् जयेत् ।
शिरोभ्रमाम्लपित्तं च चक्षुष्यं बधिरं तथा ।।
केतक्यामलकानां च चन्द्रवाक्चन्द्रभाषितम् ।

**இதன் பொருள்:—** தாழம்பு, நெல்லிக்காய், கையாந்தகரை, சீந்தில்கொடி, முதலான சரக்குகளை வகைக்கு 50 பலங்கள் வீத மெடுத்துக் கல்லுரலிலிட்டு நசுக்கிக்கொள்ளவும். பின்பு இதனுடன் சுத்த ஜலம் 170 சேர்விட்டு அடுப்பின்மேலேற்றி நாலிலொன்றாகும் வரை வற்றவைக்கவும். இக்கஷாயக்தை வடிகட்டி ஒருபாத்திரத்தி லூற்றிக்கொண்டு சுத்தமான நல்லெண்ணெய் $21\frac{1}{2}$ சேர்விட்டு ஒன்றுகலந்து, சந்தனத்தூள், ஞாழல், புஷ்கரமூலம், (வெண்கோஷ்டம்) ஏலக்காய், சிறுநாகப்பூ; சிற்றரத்தை, சிற்றுமுட்டி, கொத்தமல்லிவிதை, தாமரைமொட்டு, அல்லிக்கிழங்கு, ஆலவிழுது, ஜாதிக்காய், வெட்டிவேர், அருகம்கொழுந்து, ஆலங்கொழுந்து. நெல்லிக் கொழுந்து, அதிமதுரம், வசம்பு, இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, விலாமிச்சிவேர், சுக்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, ஸரள தேவதாரு, குங்குமப்பட, நன்னாரிவேர், தீமாநெல்லி, ...

பூலாங் கிழங்கு, கோரைக் கிழங்கு, வில்வக் கொழுந்து, அரசங் கொழுந்து, அசோகக் கொழுந்து முதலான சரக்குகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துத் தண்ணீர்விட்டு நேகவரைத்து, கஷாயம் சேர்த்து எண்ணெயுடனே குழப்பி அடுப்பின்மேலேற்றிச் சிறு தீயிட் டெரிக்கவும். நன்கு பக்குவமாகிய பின்பிதை யிறக்கி வடிகட்டி ஒரு பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

இத் தைலத்தை 1 மாதம் விடாமல் உபயோகித்துவா நன்ருக மயிர் வளரும், கபாலத்தைப்பற்றிய பற்பல ரோகங்களையும், தலைசுற்றல்,மயக்கம், பித்தாதிக்கியத்திஞலேற்படும் வியாதிகளையும், செவிடையும் நீக்கும், கண்களின் பார்வையையும் திடப்படுத்தும்.

இத்தைலம் சந்திரனல் மொழியப்பட்டது.

---

## பவுத்திர ரோகம்.

**(Dr S. வெங்கிட்டராஜன், L. I. M. (Regd )**

---

இது, ஆசன த்வாரத்துக்கு வெகு சமீபத்தில் சிறு கட்டியேற் பட்டு, அது உடைந்து, ஆறுமல் சீழையோ, நீர்கசிவையோ அரிப்பு டனும் வலியுடனும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் நோயாகும். இந்நோய் வெகு சாதாரணமாகப் பலருக்கும் உண்டாகிறது. நோயாளி இந்நோயை வெளியில் சொல்லக் கூச்சப்பட்டோ அல்லது இது மிக அற்பமான ரோகம். என்று நினைத்தோ இருப்பது தவருகும். ஏனெனில் இதற்குத் தக்க சிகித்தை செய்யாவிட்டால் நாளடைவில் தேகத்தை இளைக்கச்செய்துப் பற்பல ரோகங்களை உண்டாக்குகின்றது. முறைதவறிச் செய்துகொள்ளப்பட்ட சஸ்திர சிகித்ஸையும் இந்நோயை மேலும் வலுவுறச் செய்கின்றது.

இந்நோயின் காரணங்கள் பின்வருமாறு:—

உட்டின ரோகத்தாலு மோண்டொடி வருத்தலாலும்
வட்டமா முதரத்துள்ளே வளர்மலக் கிருமியாலும்
முட்டிநீர் சிறுத்துவிம்மி இளைத்தமாங் கிஷேத்திஞலும்
துட்டமா வெழும்புவந்தால் தோஷமுண் டாகுந்தானே.

(அகஸ்தியர்—2000)

(இதன் பொருள்) தேகத்தின் சூடு அதிகரிப்பதாலும், அதிக மான ஸ்திரீ சேர்க்கையாலும். குடலில் கிருமிகள் சேர்ந்தாலும், முதலில் நீர் எரிச்சலுடன் கொஞ்சமாக விழ ஆரம்பித்துத் தேகத்தி லுள்ள மாம்ஸதாது கோளாறடைந்து பவுத்திர நோயையுண்டாக்கு கின்றது.

சிவனுடைய வருள்தனையே மறந்துநெஞ்சில்
திருடியே வஞ்சித்து அபகரித்து
அவனுடைய பொருள்போல வடக்கஞ்செய்து
அனுதின்முந் தம்முடைமைப் போல்சிந்தித்து
பவனுடைய பொல்லாதார் பவுத்திரத்தில்
பாடுபட்டு பொருளெல்லாம் பாழாய்போகும்
தன்னுடைய விதியென்று நொந்து நொந்து
விழற்கிரைத்த நீர்போன்று மெலிகுவாரே.

(யூகிமுனி வைத்ய சிந்தாமணி)

என்றபடி பிறர்பொருளைத் திருடியோ,
ஏமாற்றியோ தன்னுடைய தாகச்செய்து
கொண்டவர்களுக்குப் பவுத்திர ரோகம்
ஏற்படும் என்றும் புலனாகிறது.

**பவுத்திர ரோகங்களின் வகைகளாவன:-** தமிழ் நூல்களின் படி **8** வகைப்படும்.

### 1. ஆசனப் பவுத்திரம்.

உடம்பு இளைக்கும் ஆஸனத்தில் அரிப்பெடுத்து லேசாக ஜ்வர மடிக்கும். பின்பு ஆஸன வாயருகில் குத்து வலியுடன் சிறு கொப்புளமுண்டாகும். உடம்பெங்கும் நடுக்கலும், மயக்கமும் ஏற்படும். மலத்துடன் இரத்தமும், சீழும் வீழும்.

### கொடிப் பவுத்திரம்.

சடைடியைப்போல் குதப்ர தேசத்தில் வீக்கமேற்பட்டு, அதன் அடிகனத்துப் புண்ணாகி அதில் பருத்திக் கொட்டைப் பிரமான முள்ள மாம்ஸ முளைகள் ஏற்படும். உடம்பு வெளுப்புடன் துர் நாற்றமும் வீசும்.

## பக்க பவுத்திரம்.

ஆண் குறியின் விதைகளுக்கிடையுள்ள நரம்பு (ஸீவனி) சம்மந்தப்பட்டு வலப்பக்கமோ அல்லது இடதுபக்கமோ தடித்துப் பழுத்து உடைந்து செந்நிறமுள்ள நீர்க்கசிவை வெளிப்படுத்தும். அதன் வழியே சிறுநீரும் கசியும்.

## மூல பவுத்திரம்.

ஆஸன த்வாரம் பெரிதாகி, பொருக்க முடியாத குத்து வலி யேற்பட்டு நரம்புகள் புடைத்து கருணைக் கிழங்கின் குருத்துப்போல் முளையேற்படும். இதிலிருந்து செந்நிறமுள்ள நீர் முதலில் கசிந்து பின்பு முளையுடைந்து துர் நாற்றமுள்ள நீரைப் பெய்விக்கும்.

## கிரந்தி பவுத்திரம்.

ஆஸனத்தில் கடுப்பு உண்டாகிக் கட்டி யேற்பட்டுப் பழுத்து உடையும். பவுத்திரத்தினுள் கோடிகள்போல் புரைகளேற்பட்டு ஆண்குறியிலும் புண்களுண்டாகும். உடம்பில் நாற்றத்துடன் வியர்வைத் துளிகள் காணும் ஆண் குறிக்கடியில் வீக்கமும் உண்டாகும்.

## மேக பவுத்திரம்

விதைகளில் நீர் சுரந்து பின்பு அது உடைந்து நீரும், சீழும் வெளிவரும். பனி ஜலம் போன்றும் நீர் கசியும். குளிர் ஜ்வரம் அன்னத்வேஷம், கைகாலெரிவு, உடம்பு கனம், இளைப்பு, மத மதப்பு முதலிய குறிகளும் காணும்.

## ஆஸன கண்டமாலை.

ஆஸனத்தில் அம்பு குத்தலைப்போன்ற வலி, தேகத்தில் ஒரு வித பீதி, ஜ்வரம் முதலியவைகளுடன், மலத்வாரத்திற்குச் சமீபத் தில் பற்பல கண்களுடன் புண்களேற்படும் அதன் வழியே மலமும், சலமும் இறங்கும், அரிப்பும், எரிச்சலும் உண்டாகும். சிவப்பு நிறமுள்ள திரவம் அதிலிருந்து கசியும்.

## சரக் கண்டமாலை.

கருணைக் கிழங்கின் குறுத்துப்போல பற்பல முளைகளேற்பட்டு அவைகள் பழுத்து உடைந்து, சீழும், இரத்தமும் பெரும் அளவில் வெளிவரும். அம்புக் குத்தலையொத்த வலியும், வீக்கமும் உண்டாகி அங்குள்ள மாம்ஸம் அழுகி நாற்றமெடுக்கும்.

ஆயுர்வேத முறையிலோ பவுத்திர ரோகத்தைக் கீழ்க்கண்டபடி வகுத்திருக்கின்றனர்.

பவுத்திர என்ற புரையோடும் துவாரம் உண்டாவதற்கு முன்னுள்ள நிலைமைக்கு "பிட்கா" (கட்டி) என்று பெயர். இதற அவயவங்களிலுண்டாகும் பிடைகைகளுக்கும், பகந்தரபிடைகைகளுக்கும் வித்யாஸம் யாதெனில், இவைகளின் அடிப்பாகம் ஆழத்திலிருப்பதுடன், தாங்க முடியாத வலியுடன் திரும்பத் திரும்ப கிளைக்கக் கூடியவைகளாக இருக்கின்றன, மாதவ நிதானத்தில் இந்நோயை **5** வகைகளாகவும், அஷ்டாங்க ஹ்ருதயத்தில் **8** வகைகளாகவும் வகுத்திருக்கின்றனர்.

## 1. சதபோனகம்.

இது வாதம் அதிகரிப்பதனுலுண்டாகும் பவுத்திரமாகும். புண்களில் பற்பல கண்கள் தென்படும். நுரையுடன் கூடிய துர்நீர்க் கசிவும் உண்டாகும். சிற்சில சமயங்களில் இவைகளின் வழியாக மலம், மூத்திரம் முதலானவைகளும் வெளிவரும்.

## 2. உஷ்ட்ர க்ரீவம்.

பித்தம் அதிகரிப்பதால் ஒட்டகத்தின் கழுத்தைப்போலப் பிடகையுடன் பகந்தரம் உண்டாகும். இது அதி சீக்கிரத்திலேயே சதையைத்தின்று, சீழை வெளிப்படுத்தும்.

## 3. பரிஸ்ராவி.

கபத்தினுலேற்படும் இந்த வகையில் வலி அதிகமிராது கெட்டியாக இருக்கும். பிசுபிசுப்புள்ளதும், தடிப்பானதும், வெள்ளைநிறமுள்ள நீர்க் கசிவை உண்டாக்கும்.

## 4. சம்புகாவர்த்தம்.

இது வாதம், பித்தம், கபம் முதலிய மூன்று தோஷங்களிலும் ஏற்படக்கூடியது. பலவித நிறத்துடன் கூடிய கசிவையும், அதிகமான குத்து வலியையும் உண்டாக்கி, பசுவின் முளைகாம்பையொத்த பிடகை ஏற்பட்டு, உடைந்து, அதன் உட்புரம் சங்கின் சுழியைப்போல் சுழித்துச் செல்லும்.

## 5. உன்மார்கீ அல்லது க்ஷதஜம்.

ஆஹாரத்துடன் எலும்பு முதலான கடின வஸ்துக்கள் உள்ளேசென்று, அது ஆஸன த்வாரத்தில் குறுக்காக சிக்கி த்வாரம்

## வைத்தியச் செய்திகள்.

### 'ஆரோக்கிய நிலை உயரச் செய்வது அடிப்படையில் நிதிப் பிரச்னையே'

### தெனுலி டாக்டர்கள் மகாநாட்டில் சுகாதார மந்திரி ஷெட்டி பிரசங்கம்.

தெனுலி மே **20**—சுகாதார மந்திரி ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி இன்று இங்கு **18**-வது ஆந்திர மாகாண வைத்திய மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் நம் நாட்டில் மக்களின் பொது ஆரோக்கிய நிலையை உயர்த்துவது முக்கியமாக ஒரு பொருளாதாரப் பிரச்னையே என அபிப்பிராயம் தெரிவித்தார். நாட்டின் வருவாய் அதிகரித்தால்தான் கல்வி, சுகாதாரம் போன்ற சமூக சேவை களுக்கு அதிகப் பணம் செலவிடுவது சாத்தியமாகும் எனச் சுட்டிக் காட்டினார்.

கிராமாந்தரங்களுக்கு உரிய வைத்திய வசதி கிடைக்காதது பற்றி அவர் குறிப்பிடுகையில் சர்க்கார் சேவையிலுள்ள டாக்டர்கள் **3** வருஷ காலம் கட்டாயமாகக் கிராமாந்தரங்களில் சேவை செய்ய வேண்டுமென விதிக்கலாம் என ஒரு யோசனை கூறப்பட்டுள்ளது என்றார்.

சுதேசி வைத்திய முறைகளை நீடிப்பதானல் இம்முறைகளின் போதனை பயிற்சி இவற்றின் தரங்கள் உயர வேண்டும் என்றும் கூறினார்.

சமீபத்தில் பிரதம மந்திரி நேருஜி ஆரம்பித்து வைத்துள்ள தொழிலாளருக்கான சர்க்கார் இன்சூரன்ஸ் திட்டத்தை வெற்றி பெறச் செய்வதில் டாக்டர்களுக்கு முக்கிய பொறுப்பு உண்டென் றும், அதை அவர்கள் நிறைவேற்றி வைக்குமாறும் ஸ்ரீ ஷெட்டி கேட்டுக்கொண்டார். வைத்தியத் தொழிலில் இங்கு ஆராய்ச்சித் துறை முயற்சியே இல்லை என்று கூறி அத்துறையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

#### பிரசங்க விவரம்.

மந்திரி பேசியதாவது:— வைத்தியத் தொழில் ஒரு பெரிய சேவையாகும். அது வர்த்தகமல்ல. உயிரைப் பேணுவது மட்டி லும் உங்களது நோக்கமாயிருந்தால் போதாது மக்கள் பூரண ஆரோக்கிதுத்துடனிருக்கச் செய்வதும் உங்கள் நோக்கமாயிருக்க வேண்டும்.

## க்ஷேம நல நல்லாட்சி.

இந்தியாவில் தற்போதுள்ள நிலைமைகளில் பிரிட்டனிலுள்ளது போன்ற விரிவான தேசிய சுகாதார சேவை எதையும் ஏற்படுத்த இயலாது. இந்த வருஷம் பிப்ரவரி மாதத்தில் பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு தொடங்கி வைத்துள்ள தொழிலாளருக்கான சர்க்கார் இன்சூரன்ஸ் திட்டப்படி **1954** ஜுலைக்குள் நாட்டிலுள்ள **25** லக்ஷம் ஆலைத்தொழிலாளர் வைத்திய உதவி பெறுவர். கான்பூரிலும், டில்லியிலும் திட்டம் ஏற்கனவே அமலுக்கு வந்துள்ளது நீங்கள் அறிந்ததே. இந்திய சர்க்காரின் லட்சியமான க்ஷேம நல ராஜாங்கத்தை அடைவதில் ஷ்டி திட்டம் முதல் படியாகும். திட்டத்தை அமல் செய்வதில் டாக்டர்களுக்கு முக்கிய பங்குண்டு. அதன் வெற்றியைத் தேசம் முழுதும் ஆவலுடன் கவனித்துக்கொண்டிருக்கிறது.

## பொருளாதாரப் பிரச்னை.

மக்களின் பொதுவான ஆரோக்கிய நிலையை உயர்த்துவது அடிப்படையில் ஒரு பொருளாதாரப் பிரச்னையாகும். பொருளாதாரத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கான விரிவான ஏற்பாட்டில் முதல்படியே நமது **5** வருஷ அபிவிருத்தித் திட்டம். பொருளாதார நிலையை மேம்படுத்துவதே நமது தேசியத் திட்டமிடுதலின் முதல் நோக்கம். அப்படியானால்தான் வருங்காலத்தில் நமது வருவாயில் அதிகமான பகுதியைக் கல்வி, சுகாதாரம் போன்ற சமூக சேவைகளுக்குச் செலவிட முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனேயே விவசாய, ஆலை உற்பத்திப் பெருக்கான பெரிய நீர்ப்பாசன, விசைத் திட்டங்களுக்கு **5** வருஷத்திட்டத்தில் ரூ. **80** கோடி ஒதுக்கப்பட்டுள்ளன.

வைத்தியத் திட்டங்களில் (**1**) வைத்தியக் கல்வி விஸ்தரிப்பு. (**2**) ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகளில் அபிவிருத்தி செய்வதன் மூலம் வைத்திய உதவி விஸ்தரிப்பு. (**3**) க்ஷயரோக ஒழிப்புக்குப் புதிய ஸானட்டோரியங்கள் ஏற்படுத்துதல். (**4**) குஷ்டரோக ஒழிப்பு இயக்க அபிவிருத்தி. (**5**) மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் விஸ்தரிப்பு முதலியன இடம் பெற்றுள்ளன.

தற்போதுள்ள வைத்தியக் கல்லூரிகள், ஆஸ்பத்திரிகளில் அபிவிருத்தி செய்தல். குண்டூர் வைத்தியக் கல்லூரியை எல்லாப்

பிரிவுகளும் கொண்ட முதல் ரகக் கல்லூரியாக்குதல். மதுரையில் புதிய வைத்தியக் கல்லூரி ஏற்படுத்துதல் ஆகியன திட்டத்தில் அடங்கும்.

## கிராமங்களின் கஷ்டம்.

வைத்தியத் துறையில் இன்று உரிய சலுகை பெறாத கிராமாந்திர மக்களுக்குப் போதுமான விதத்தில் அளவிலும் தரத்திலும் வைத்திய சேவைகளை விஸ்தரிக்கும் பிரச்னையையும் நாம் இன்னும் சமாளிக்க வேண்டியிருக்கிறது சுகாதாரக் கல்வியைப் பரப்புவதன் முக்கியத்வம்பற்றித் திட்டக் கமிஷன் உரிய அளவு வலியுறுத்தி யுள்ளது. நோய் வந்தபின் சிகித்சை செய்வதை விட நோய்த் தடுப்புக்காக அதிகப் பணம் செலவிடுவது அவசியம் எனத் திட்டக் கமிஷன் வற்புறுத்தியுள்ளது சரியே. நோய்கள் வராமல் தடுத்துவிடுவது சர்க்காரின் வைத்தியச் செலவுகளைக் குறைக்குமல்லவா?

## ஜனப்பெருக்கப் பிரச்னை.

உலகிலேயே ஜனத்தொகைப் பெருக்கத்திற்கேற்ப உணவு உற்பத்தி அதிகமாகவில்லை. இவ்விஷயத்தில் நம் நாடு இன்னும் மோசம். உலக ஜனத்தொகைப் பெருக்கம். இப்பிரச்னையைச் சமாளிக்கக் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியம் ஆகியன குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் கவனம் செலுத்தி வருகிறது. குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியம்பற்றி இந்திய திட்டக் கமிஷனும் வலியுறுத்தியுள்ளது. மக்களுக்கு கருத்தடை பற்றிய போதிய ஞானம் ஏற்படச் செய்வதன் அவசியத்தையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதார விஷயத்தில் ஜனங்களிடையே ஒரு புது மனப்பான்மை ஏற்படச் செய்வது டாக்டர்கள் பொறுப்பாகும் நோய்த் தடுப்பு வைத்திய முறையில், சுகாதாரமான முறைகளில் மக்கள் வாழக் கற்றுக் கொடுப்பது ஒரு முக்கிய பணியாகும்.

ஹோட்டல் சுகாதாரக் கமிட்டி சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை நம் முன்புள்ள அபாயத்தை வெளியிட்டுள்ளது. ஹோட்டல்களில் பரிமாறப்படும். உணவுகளிலும், பானங்களிலும் தொத்து வியாதிக் கிருமிகள் மலிந்துள்ளதாகக் கமிட்டி கூறியுள்ளது. உணவு சுத்தமாயிருத்தல் போஷாக்குடனிருத்தல் இவையே ஆரோக்கியப் பராமரிப்பில் முக்கிய அம்சமானபடியால், இன்னும் சீரிய முறையில் ஹோட்டல்கள் நடத்தக் கற்றுக்கொடுப்பதவசியம்.

## டாக்டர்கள் தொகை.

மேற்கத்திய வைத்திய முறையறிந்த **9272** டாக்டர்கள் இந்த ராஜ்யத்தில் உள்ளனர். நாட்டு வைத்திய முறையில் "ஏ" பிரிவு டாக்டர்கள் **1377** பேரும், "பி" பிரிவினர் **12339** பேரும் இருக்கின்றனர். மேற்கத்திய முறை டாக்டர்களின் தொகை தேவைக்குப் போதுமானதாக இல்லை. தவிர, இவர்கள் பெரும்பாலும் நகரங்களிலேயே குழுமிக் கிடக்கின்றனர் டாக்டர்களின்மையால் கிராமாந்தரங்களில் பல சிகிச்சை சாலைகள் மூடப்பட்டுள்ளன. சர்க்கார் சேவையிலுள்ள டாக்டர்களை **3** வருஷம் கிராமாந்தரங்களில் சேவை செய்யுமாறு கட்டாயப்படுத்த வேண்டும் என ஒரு யோசனை கூறப்பட்டுள்ளது.

## உள்நாட்டு முறைகள்.

உள் நாட்டு வைத்திய முறைகளின் நிலைமையும், அவற்றின் எதிர்கால வளர்ச்சியும் ஸ்திரமின்றி இருக்கின்றன. இது சம்பந்தமாக சர்க்கார் நியமித்த நிபுணக் கமிட்டிகளின் பல சிபாரிசுகள் இனிமேல் தான் அமல் செய்யப்பட வேண்டும். ஜனங்களின் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து, உள்நாட்டு வைத்திய முறைகளை, நீடிப்பதாயின் இந்திய வைத்திய ஸ்தாபனத்தின் போதனை பயிற்சி தரங்களை நாம் உயர்த்த வேண்டும். நவீன (மேற்கத்திய) முறை வைத்தியத்தில் அம்மாணவர்களுக்கு போதிய ஞானம் ஏற்படுமாறு செய்வதும் அவசியம்.

நவீன வைத்திய முறை. ரண சிகிச்சை (ஆப்பரேஷன்) இவற்றில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வைத்தியக் கல்வி போதனை ஸ்தாபனத்துடன் தொடர்பில்லாத டாக்டர்கள் சீக்கிரமாக நவீன முன்னேற்றங்கள்பற்றிய தொடர்பை இழந்து விடுகின்றனர். பொதுவாகவே, தங்கள் வைத்திய அறிவையும், சிகிச்சை உத்திகளையும் அபிவிருத்தி செய்வதில் சிரத்தையைக் காணோம். சென்னையிலும், விசாகப்பட்டணத்திலும் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஞாபகமூட்டும் வகுப்புகளில் தனிப்பட்ட டாக்டர்களில் வெகு சிலரே பட்டம் பெற்றபின் ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுகின்றனர். குறிப்பிட்ட ஒரு துறையில் பாண்டித்யம் பெறுவதென்பது நவீன முறையில் ஒரு முக்கிய அம்சமாகி விட்டது. விசேஷ நிபுணர்கள் (ஸ்பெஷலிஸ்ட்) தொகை குறைவு. எனவே போதிய தகுதியுள்ளவரின்மையால் பல ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளில் விசேஷப் பிரிவுகள் ஏற்படுத்துவது கஷ்டமாயிருக்கிறது.

### ஆராய்ச்சியின் அவசியம்.

வெளியூர்களில் ஆராய்ச்சிக்கூட வசதிகள் இல்லாததால் இளைஞர்களான சில டாக்டர்கள் ஆராய்ச்சிக்கூடம் அமைக்கும் கல்வியில் பயிற்சி பெற்றுத் தாங்களே சொந்தத்தில் கிருமிகள் பற்றிய ஆராய்ச்சிக்கூடங்களை ஏற்படுத்தலாம். அவர்களுக்கு இது நியாய மான வருவாயளிப்பதுடன், ஸ்தல டாக்டர்களுக்கும் நோய் இன்ன தென அறிய உதவிகரமாயிருக்கும்.

தெலுங்கு ஜில்லாக்களில் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் ஊதிய மின்றிக் கவுரவ சேவை செய்ய அதிக டாக்டர்கள் முன் வருவ தில்லை. ஆனல் இதர ஜில்லாக்களிலோ கவுரவச் சேவையில் சேருவதில் பலத்த போட்டி யிருக்கிறது. சென்னை நகரிலும் வெளி ஜில்லாக்களிலுமாக **358** டாக்டர்கள் கவுரவ சேவை செய்து வருகின்றனர். தெலுங்குப் பகுதிகளில் "நர்ஸிங் ஹோம்கள்" தொகையும் சொற்பமே.

பொதுவாகத் தெலுங்கு ஜில்லாக்களில் நோய்கள் அதிகம் காணப்படுகின்றன, விசாகைக் கல்லூரி, ஆஸ்பத்திரி அபிவிருத் தித்திட்டத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது வும் குண்டூர் கல்லூரி முதல் ரகக் கல்லூரியானதும் அதுவும் ஆந்தி ராவில் சேவை செய்வதற்கு ஏராளமான டாக்டர்களை அளிக்கும் என நம்புகிறேன்.

### கௌரவ வைத்திய அதிகாரிகள் முறையை விஸ்தரிக்கவும்

ஆந்திர மகாநாட்டில் ஹனுமந்த ராவ் தலைமையுரை.

**சம்பள விகிதங்களை மாற்றியமைக்க கோரிக்கை.**

---

**மேல் விபரம்.** தெனாலி, மே **20**—இன்று இங்கு ஆரம்ப மாகிய ஆந்திர மாகாண வைத்ய மாகாநாட்டிற்கு டாக்டர் ஜி. வி. ஹனுமந்த ராவ், தலைமைவகித்துப் பேசுகையில் ராஜ்யத்திலுள்ள வைத்ய அதிகாரிகளின் சம்பள விகிதங்கள் உயர்த்தப்படவேண்டு மென்றார். (சுகாதார மந்திரி ஸ்ரீ ஏ. பி. ஷெட்டியின் ஆரம்பஉரை ஏற்கனவே நேற்றைய தினமணியில் வெளியாகியிருக்கிறது.)

### தலைமையுரை.

தலைமையுரையில் டாக்டர் ஜி. வி. ஹனுமந்த ராவ் மேலும் கூறியதாவது:— தேசத்தில் போலி நாட்டு வைத்ய முறைகள்

கையாளப்படுவதை அகற்ற சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். சில நாட்டு வைத்தியர்கள் 'ஸ்டெதாஸ்கோப்', இன் செக்ஷன் கருவிகளுடன் செய்வது வேடிக்கையாக இருக்கிறது. அவர்கள் அரைகுறையாகத் தெரிந்துகொண்ட வைத்ய முறைகளைக் கையாளுகிறார்கள். இதை உடனடியாக நிறுத்தவேண்டும்.

வைத்தியக் கல்விமுறைபற்றி குறிப்பிடுகையில் அவர் கூறியதாவது:— விஞ்ஞான சாஸ்திர அடிப்படையில் அமைந்த நவீன வைத்ய முறைகளே கையாளப்படவேண்டும். இதர உள்நாட்டு வைத்திய முறைகள், மனிதர்களின் உடலுறுப்பைப்பற்றி அரை குறையாகத் தெரிந்துகொண்டுள்ள படிப்பின்மீது அமைந்துள்ளன. இவை இக்காலத்திற்குப் பொருத்தமற்றவையாகும். பழைய முறைகளிலும் சில அபூர்வமான மருந்துகள், மருந்து மூலிகைகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறேன். இதைப்பற்றி ஆராய்ச்சி நடத்த திட்டக் கமிஷன் பணம் ஒதுக்குவது குறித்து சந்தோஷமடைகிறேன்.

இவற்றை ஆராச்சி செய்தபின் நவீன வைத்ய முறையில் இம்முறைகளை இணைத்துக்கொள்ளலாம். இந்திய வைத்ய முறைகளைப் போதிக்கும்போது ஆங்கில வைத்ய முறைபற்றியும் போதிக்கப்படுகிறது. இதனால் இம்மாணவர்களுக்குக் குழப்பம் ஏற்படலாம். இதுபற்றியும் சர்க்கார் கவனிக்க வேண்டும் இந்திய வைத்யமுறையைப் பின்பற்றும் வைத்யர்களுக்கும் ரிஜிஸ்டர் வைக்க ஏற்பாடு செய்வதை வரவேற்கிறேன்.

வைத்தியக் கல்லூரியில் மாணவர்களை அனுமதிப்பது பற்றிக் குறிப்பிடுகையில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை அனுசரித்து நடக்கும்படியும், இந்தியாவெங்கும் ஒரேவிதமான முறையைப் பின்பற்றும்படியும், அதிக வைத்யக் கல்லூரிகளை திறக்கும்படியும், அதற்கு முன்பு தற்காலிகமாக வைத்யக் கல்லூரியில் ஷிப்டு முறையைக் கையாளலாமென்றும் அவர் கூறினார்.

கிராமங்களுக்கு வைத்திய வசதி அளிப்பது அவசியமென்றும் வற்புறுத்தினார். ராயல சீமைப் பஞ்சத்தைக் குறிப்பிடுகையில் இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்யாததே பஞ்சத்திற்குக் காரணமாகும் என்றும், தனி ஆந்திர மாகாணம் சீக்கிரத்தில் ஏற்பட வேண்டுமென்றும் கூறினார். உணவு தான்யங்கள் உட்பட சகல பொருள்களின் விலைவாசி குறைய வேண்டுமென்றும், இதற்கு சர்க்கார் தலையீடு அவசியமென்றும் சிலர் இவ்வாறு விலைவாசி குறைவதைக்குறித்து கவலைதெரிவிப்பதில் அர்த்தமில்லையென்றும் கூறினார்.

## வைத்திய அதிகாரிகளின் சம்பளம்.

மேலும் அவர் கூறியதாவது:— சென்னை ராஜ்யத்தில் வைத்திய அதிகாரிகளின் சம்பளங்களை வட நாட்டிலுள்ள ராஜ்யங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகக் குறைவாக இருக்கிறது. அஸிஸ்டெண்ட் சர்ஜன் சம்பள விகிதம் ரூ. **400** ஆக உயர்த்தப்படவேண்டும். உயர்ந்த பட்சம் ரூ. **800** ஆக இருக்கவேண்டும். சிவில் சர்ஜன்களின் சம்பளம் ரூ. **800** ஆகவும, உயர்ந்த பக்ஷம் ரூ. **1200** ஆகவும் இருக்கவேண்டும்.

அஸிஸ்டெண்ட் புரபஸர்கள் தங்களுடைய பிரைவேட் சிகிச்சை வருமானத்தை விட்டுக் கொடுப்பதினால் அவர்கள் சம்பளமும் உயர்த்தப்பட வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்கள் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஆஸ்பத்திரிகள் அளித்துவரும் வைத்திய உதவிபோதாது. கௌரவ வைத்திய அதிகாரிகள் பதவி முறையை இன்னும் விஸ்தரிக்கலாம்.

## வரவேற்புரை.

டாக்டர் கே. வெங்கடராயுடு சௌத்ரீ எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது :— நமது தேசத்திலுள்ள பொது ஜனங்களின் தேக நலம் அதிகரிக்க வேண்டும். இதற்கு போதிய போஷாக்கும், நல்ல ஜாகை வசதியும் அவசியம். பள்ளிக்கூடங்களில் குழந்தைகளின் சுகாதாரமும் கவனிக்கப்படவேண்டும். பொது ஜனங்களுக்கு சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுக்கவேண்டும். குடும்பக் கட்டுப்பாடும் அவசியம்.

வைத்தியர்கள் மருந்துகளை நோயாளிகளுக்குக் குறிப்பிடும் போது நமது தேசத்தில் செய்யப்படும் மருந்துகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அயல் நாட்டு தயாரிப்புகளை விட இவற்றிற்கு முதலிடம் அளிக்கவேண்டுமென்றும் பிச்சைக்காரர்கள் பிரச்னைகளையும் சர்க்கார் கவனிக்க வேண்டுமென்றும் கூறினர்.

இந்திய சுகாதார மந்திரி ஸ்ரீமதி ராஜகுமாரி, அம்ருதகௌரி சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா வைத்திய சேர்விஸ்கள் டைரக்டர் டாக்டர் பி. அருணாசலம் ஐ. எம். ஏ, தெ. இந்தியா மாகாண கிளை சங்கத்தின் தலைவர் டாக்டர் ஒய். பி. வாசுதேவன் முதலியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

## 4. அர்சஸ் (மூல) நோய்க்கு.

தனக்குறு ரத்தமூலம் தாங்கு முள்மூலம் சீயும்
சினக்குறு முளையாமூலம் தீமலக்குத்தல் மூலம்
மனக்குறு வாதபித்த வளமைய மூலத்தோடு
கனக்குறு மருந்து சொல்லக் கன்னியே கேட்டிடாயே. 10

கன்னியிலை ச்சருகு முக்தங்கரணையும் வெருகும் சுக்கும்
வன்னியாம் சித்திரமூலம் மறள் கிழங்கோடு கடுக்காய்
பன்னிய பிரண்டை கொன்றை பகர் புளிநரளை க்காட்டிற்
றுன்னிய கரணைப் பாலில் சூர்ணம் செய்து கொள்ளே. 11

[க-ரை.] காய்ந்த கற்றாழைமடல், கோரைக்கிழங்கு, கரணைக்கிழங்கு, வெருகன் கிழங்கு, சுக்கு கொடிவேலி வேர், மருள் கிழங்கு, கடுக்காய், பிரண்டை, கொன்றைப்பட்டை, புளிநரளை, காட்டுக் கரணைக்கிழங்கு இவைகளை சமனெடை சேர்த்துத் தூள் செய்து பாலில் கலந்து சாப்பிட ரத்தமூலம், உள்மூலம்; சீழ் மூலம், தீய்ந்த மலத்துடன் உள்ள மூலம், மற்றும் வாத பித்த கப தோஷங்களால் ஏற்படும் எல்லா வகை மூலங்களும் தீர்ந்து போம்.

## 5. கிரஹணிக்கு.

செய்திடு வாதபித்த சிலேத்தும கிராணிமூலம்
கொய்திடும் கிராணிவாயு கூடிய கிராணி பின்னை
நைந்திடும் சங்கிரகிராணி நலத்த சூசிகா கிராணி
எய்திடும் கிராணிக் கெலாமினிய நல் மருந்து தானே, 12

இனியதொருடும்பு காய மிந்துப்பு வளையலுப்பு
கனிய வெள்ளுநள்ளி சுக்குங்கடிய திப்பிலிமரிசம்
தனியது சவுட்டுமண்ணும் தளர் சித்திரமூல மோமம்
பனியது பிரமிச்சாற்றால் பண்ணிவிப் பொடியும் கொள்ளே.

[க-ரை] பெருங்காயம், இந்துப்பு, வளையலுப்பு, வெள்ளுநள்ளி சுக்கு, திப்பிலி, மிளகு, சவட்டுப்பு, கொடிவேலிவேர், ஓமம், இவைகளை சமனெடை எடுத்துப் பிரமிச்சாற்றாலரைத்துக் காயவைத்துப் பொடிசெய்து சாப்பிட வாத பித்த கப தோஷங்களால் ஏற்படும் சங்கிரக கிரஹணி சூசிகா கிரஹணி போன்ற எல்லா கிரஹணீ ரோகங்களும் விலகும்.

## 6. குன்மத்துக்கு.

பண்ணிய வாதபித்தம் பகரைய குன்மமல்லால்
நன்னிய சத்திகுன்மம் நைந்திடும் வாநீர்குன்மம்
கன்னியே எரித்தகுன்மம் கனத்திடும் பிரட்டுகுன்மம்
துன்னியே வலிக்கும் குன்மம் கூறுவேன் மருந்துதானே.

கூறிய நாபிசூதம் கொடியவெண் காரம்தாரம்
தேறிய இருவிலிங்கம் திகழ்மனோ சிலையக்காரம்
காரிய கெந்தகந்தான் தளர்திரு கடுகும்கூட்டி
ஆறிய பொடிதான் பண்ணி அதனிற்றே னருந்துவாயே 15

[க-ரை] கருநாபி, ரஸம், வெங்காரம், தாளகம் இருவி, லிங்கம் மனோசிலை, அக்கராகாரம், கெந்தகம், சுக்கு, மிளகு திப்பிலி இவைகளில் சுத்திசெய்ய வேண்டியவைகளைச் சுத்தமாக்கிச் சமனெடை சேர்த்தரைத்துப் பொடியாக்கி தேனுடன் சாப்பிட வாத-பித்த-கப தோஷங்களால் ஏற்படும் எல்லாவித குன்ம நோய்களுமகலும்.

## 7. மேகங்களுக்கு.

அருந்திய வாதபித்தம் ஐயமோ டிருபதாக
வருந்திய வாதம்நாலும் வளர்சல பித்தமாறும்
பொருந்திய வையம்பத்தும் பூண்டிடு மருந்துகட்கோர்
திருந்திய மேகமெல்லாம் தீர்ந்திட மருந்துக்காமே. 16

ஆமிது மருந்தாவாரை யிலைகட லமுதங்கொன்றை
தாமிது மருந்துநாவல் களர்க்கொட்டைக் காந்தைபூலா
நாமிது மிலந்தைகாட்டு மல்லிகை நல்விளாவும்
போமிது வூசிகாந்தம் புகழ் மதுரம்தான்கிட்டே. 17

மதுரம்சந் தனம்கர்பூரம் மகிழ்பச்சை மகாப்பூவும்
கதிர்பெரு மெலவங்கம்தாளி சமாஞ்சில் மஞ்சள்
கதிரிலா மிச்சைசீந்தில் கடுமுக்தம் வேலிசட்டம்
எதிரிலா எண்ணெய்பாலும் எரித்து நீ முழுகிடாயே. 18

[க-ரை] வாயுவினால் ஏற்படும் நான்குவகை மேகங்களையும் பித்தத்தால் ஏற்படும் ஆறுவகையையும் கபத்தால் ஏற்படும் பத்து வகையையும் ஆக இருபதுவகை பிரமேகங்களைப்போக்க ஆவாரையிலை, கடற்பாசி, கொன்றைப்பட்டை, நாவல்தளிர், கொட்டைக்காந்தை பூலாங்கிழங்கு, இலந்தைக் கொட்டை, காட்டு மல்லிகை, விளாவேர், ஊசிகாந்தம், அதிமதுரம் இவைகளைச் சமனெடை சேர்த்து இடித்துச் சூர்ணமாகவோ அல்லது மாத்திரையாகவோ செய்து சாப்பிடவும்.

பிரமேஹங்களைப் போக்குவதில் உதவியளிக்கும் தைலம் செய்முறை பின் வருமாறு அதிமதுரம், சந்தனம், மகிழம்பூ, விபூதிப் பச்சையிலை, வெங்காயம், கிராம்பு, தாளிசபத்திரி, ஜடாமாஞ்சில், விலாமுச்சவேர், சீந்தில், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், இவைகளை வகைக்குச் சமனெடை சேர்த்து அரைத்துக் கல்கமாக்கி கல்கத்திற்கு நான்கு பங்கு ஜலமும் (அல்லது கல்கத் திரவ்யங்களாலேயே தயார்செய்யப்பட்ட பதினாறு பங்கு கஷாய

மும்) சேர்த்துத் தைல பதத்தில் எரித்து வடிகட்டி பாத்திரபாக மாக பச்சைக் கர்ப்பூரமும் புனுகும் (கல்கத் திரவ்யங்களின் தனித் திரவ்யத்தின் எடைக்குச் சமமாக) சேர்த்துக்கொண்டு தலைக்கும் உடலுக்கும் தேய்த்து ஸ்னனம் செய்துவர சிறந்த குணமளிக்கும்

## 8. மூத்திரா சய நோய்களுக்கு.

எரித்திடும் ரக்தமேகம் இசைந்தசீ மேகம்தண்டு
  மரித்திடு மேகம்புண்ணுப் வந்திடும் கிருச்சப்பாலை
தரித்திடும் துள்ளிமேகம் சலக்கட்டு மேகம்தங்கா
  வெரித்திடு மேகம்போக விளம்புவேன் மருந்துதானே. 19

விளம்புநீ பரங்கிப்பட்டை மேவும்கந்தகம் ஜாதிக்காய்
  களம்புறு கிராம்புநாகம் கர்ப்பூரம் ஜாதிப்பத்திரி
தளம்புறு மசுவகந்தி தளர்கொடி வேலிமாஞ்சில்
  இளம்புசர்க் கரைநெய்கூட்டி இதமுடனுட்கொள்வாயே. 20

[க-ரை] பரங்கிப்பட்டை, கந்தகம், ஜாதிக்காய் கிராம்பு, சிறுநாகப்பூ, கர்ப்பூரம், ஜாதிப்பத்திரி, அமுக்கருக் கிழங்கு, கொடிவேலி, ஜடாமாஞ்சில், இவைகளைச் சமஎடை சேர்த்துப் பொடிசெய்து எல்லாவற்றிற்கும் சமம் சர்க்கரைசேர்த்து நெய்யில் குழப்பிச் சாப்பிட ரக்தமேகம், சீழ்மேகம், நீர்த்தாரையில் புண்ணுடன் ஏற்படும் எல்லாவித மூத்திரா சய நீர்தாரை ரோகங்களில் மிகச்சிறந்த குணமளிக்கின்றது.

## 9. காமாலைக்கு.

இதமுறு வாதபித்த மிசைந்த சிலேத்தும காமாலை
  பதமுறு மழற்காமாலை பாண்டுவீங் கியகாமாலை
நிதமுறு வாதபித்த நீடுகா மாலைஜயங்
  கிதமுறு பித்தத்தோடு சேர்ந்தகா மாலைஎன்றே 21

சேர்ந்த காமாலைக்கெல்லாம் சிறந்தஅப்பொடியும் கிட்டம்
  சார்ந்திடும் கடுக்கால் நெல்லி த்தானி ஜீரகமிரண்டும்
போர்ந்த வெள்ளுள்ளியும் காந்தம் புகழிந்து காயஞ்சுக்கும்
  தூர்ந்த திப்பிலி மரிசம் தொன்றறு பழச்சாறியே 22

[க-ரை.] அரப்பொடி, மண்டூரம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஜீரகம், கருஞ்ஜீரகம், வெள்ளுள்ளி, காந்தம், இந்துப்பு; பெருங்காயம், சுக்கு, திப்பிலி, மிளகு. இவைகளைச் சமஎடை சேர்த்துத் தூள் செய்து பழச்சாற்றுடன் உட்கொள்ள வாதபித்த கப தோஷத்தால் ஏற்படும் காமாலை நோயில் பாண்டுவுடனும் ஸர்வாங்கங்களிலும் வீக்கத்துடன் ஏற்படும் நிலையிலும் சிறந்த குணமளிக்கின்றது. சிலர் அரப்பொடியையும் மண்டூரத்தையும் நன்கு சுத்தி செய்தபின்னரும் 10 தடவைகள்

வரை புடமிட்ட பின்னரும் உபயோகப்படுத்துவர். அதிகப் புடமிடாது அவைகளை உபயோகப்படுத்துவதே சிறந்தது.

## 10. கரப்பான், குட்டம், சொரி சிரங்குகளுக்கு.

பதமுறு சூலை புண்கள் பகர்ந்திடு கடி விகாரம்
மிதமுறு பெருவியாதி யிசைந்த நற்குட்டரோகம்
சதமுறு தேமல் மேனி தளரும் தாமரை கை வெள்ளை
நிதமுறு சொரி சிறங்கு நிகழ்ந்திட மருந்து கேளே. 23

நிகர்ந்த நீரெட்டி வித்து நேர்படும் சூதம் லிங்கம்
தகர்ந்த கந்தகமுமல்லால் தாபமும் துரிசும் துத்தம்
புகர்ந்த நெய் வார்த்தரைத்துப் பொருத்து நாற்பது
[நாள் கொள்ள
சகந்தனிற் சாம்பிருணி தைலம் செய்துடம்பிற் பூசே. 24

[க-ரை.] நீரடிமுத்து, சுத்தரஸம், சுத்த கந்தகம், சுத்த தாளகம், சுத்தமான துரிசு, பால்துத்தம் இவைகளை நெய்விட்டரைத்து ஸம்புடத்திலிட்டு சிலநாட்கள் கழித்து நாற்பது நாட்கள் வரை பத்தியத்துடன் சாப்பிட்டு வரவும். மேல் உடலிற்கு நோயுள்ள பாகமெல்லாம் சாம்பிருணி தைலம் தடவி வரவும். இவ்விதம் செய்ய மேகப்புண்கள், இடுப்பில் வரும் படை, குட்டம், தேமல், படர்தாமரை, வெண்குஷ்டம், மற்றும் கடுமையான சொரி சிரங்குகள் இவை நீங்கும்.

## 11. கபால நோய்களுக்கு.

பூசிய கபால சூலை பொருக்க பீனிச நீர்தும்மல்
நாசிகா பீட [1]ரோகம் நாற்றமும் தினவும் குட்டம்
தேசிகன் காதில் சீயும் சேர்ந்திடும் கபால வாய்வும்
காசியில் தந்தரோகம் காந்திட மருந்து கேளே. 25

காந்திடும் பெருமருந்து கண்டங் கத்திரியும் சுக்கும்
சுராந்திடும் செங்கத்தாரி தோன்று சீரகமிரண்டும்
பரந்திடும் கடுகுரோகிணி பகர் சங்குமரத்தை கூட்டி
நிரந்தரம் சூர்ணம் தின்ன நீங்கிடும் ரோகம்தானே. 26

[க-ரை.] ஈசுவரமூலி, கண்டங்கத்திரி, சுக்கு, செங்கத்தாரி வேர், ஜீரகம் கருஞ்ஜீரகம், கடுகுரோகிணி, சங்கம்வேர், அரத்தை இவைகளைத் தூள்செய்து சாப்பிட காபாலசூலை பீனசம், நீர் தும்மல், மூக்கு ரோகங்கள், பூதி கபத்தினால் ஏற்படும் தினவும், நாற்றமும், காதில் சீழ் வருதல், பல் நோய்கள் போன்ற ஊர்த்வ ஜத்ரு (கபால) நோய்களில் மிகச்சிறந்த பலனளிக்கும்.

---

1 ரோகம் நாசமும் என்ற பாடபேதமுண்டு.

மதராஸ் ஸ்டேட் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ்
கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்,
X 185, லேட்டிஸ்பிரிட்ஜ் ரோட், அடையாறு, மதராஸ்.

பிரஸிடெண்ட்: வைத்யரத்ன கேப்டன் G. ஸ்ரீனிவாசமூர்த்தி.
பி. எ. பி. எல். எம். பி. ஸி. எம்.

## அறிக்கை,

1. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசிய மருந்துகள் சாஸ்திர சம்பந்தமாயும் தக்க மேல்பார்வையுடனும் தயார் செய்து தேசிய மருந்துகள் கையாளப்பட்ட டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதராஸ் ப்ரொவின்ஷியல் இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி ஸ்டோர்ஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும் மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்

2. தேசிய இந்திய டாக்டர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசிய வைத்தியர்களுக்கும் மாத்திரம் மேற்கண்ட சொஸைடியில் மெம்பராகச் சேரலாம்.

3. ஒரு பங்கின் விலை 5 ரூபாய், பிரவேசக் கட்டணம் பங்கு 1-க்கு 4 அணா கட்டவேணும் ஒரு மெம்பர் 1000 பங்குவரை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பிரவேசக் கட்டணம் எல்லா பங்குகளுக்கும் கட்டவேண்டியது 5 ரூபாய்தான்.

4 மேற்கண்ட சொஸைட்டியின் நடந்த 3 வருஷத்தில் லேவாதேவி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது

| | | 1945-46 | 1946-47 | 1947-48 |
|---|---|---|---|---|
| 1 | மெம்பர்கள் (தேசிய டாக்டர்கள்) | 261 | 364 | 442 |
| 2. | பங்குத் தொகை | 12 985 | 14 135 | 16,160 |
| 3. | மருந்து விற்பனை | 68,589 | 1 15, 683 | 1,38 348 |
| 4. | லாபம் | 6 000 | 15 085 | 40,522 |
| 5. | பங்குக்கு வட்டி (பைலாவில் ஏற்பட்டபடி) | 5% | 5% | 5% |
| 6 | மருந்து வாங்கியதின் பேரில் லாபம் | 1 ரூபாய்க்கு 1 பை வீதம். | 1 ரூபாய்க்கு 4 பை வீதம். | 1 ரூபாய்க்கு 6 பை வீதம் |

5. தேசிய வைத்தியர்கள் யாவரும் மேல்கண்ட சொஸைடியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைடியின் லேவாதேவியை அபிவிருத்தி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வை. கோண்டல்ராவ்,
காரியதரிசி.

V. P. A.

# "சக்தி ஸஞ்சீவி"

(REGD.)

டிரேட்  மார்க்

வைத்ய வாசஸ்பதி

## பண்டிட் P. S. ராமசர்மா

அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட
கைகண்ட பலனளிக்கும்.

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும்
போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.

எங்கும் கிடைக்கும்!

தயாரிப்பவர் :—

## ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,

கரூர். (S. Ry.)


Published by Pandit P. S. Rama Sarma for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Vadivel Press, Karur.